**IN THE SPECIAL COURT OF FOREST OFFENCE CASES JUDGE,**

**KANNIYAKUMARI DISTRICT AT NAGERCOIL**

**C.C. No.22 /2025**

**Deposition of P.W. 1**

| | | |
|---|---|---|
| **Name** | : | திரு.திவாகரன் நாயர் |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |
| **Dated** | : | **04.06.2026** |

Solemnly affirmed by Assistant Tmt. Sheeba

**சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை :**

நான் தற்போது எர்ணாகுளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தூத்துக்குடி மாவட்ட ஸ்ரீவைகுண்ட வனச்சரக அலுவலராக பணியாற்றி கடந்த 2008 ஆம் ஆண்டு பணி ஓய்வு பெற்றுள்ளேன். வழகககு சம்பவத்தின்போது நான் அழகியபாண்டிபுரம் பிரிவு வனவராக பணிபுரிந்தேன். 1 மற்றும் 2 எதிரிகளை எனக்கு தெரியும். 3 மற்றும் 4 எதிரிகள் ஞாபகம் இல்லை. 9.1.1994 ஆம் தேதி வழக்கம்போல நானும்

என்னுடன் பணியாற்றிய வனக்காப்பாளரான பீர்முகமது என்பவரும் அரசு காப்புக்காட்டிற்கு ரோந்து பணிக்கு சென்றோம். நாங்கள் இருவரும் ரோந்து திரும்ப வரும்போது மாலை 4 மணி இருக்கும். சம்பவ இடமான கீரிப்பாறை முதல் நாகர்கோயில் செல்லும் சாலையில் உள்ள கொத்தளம்பள்ளம் என்னும் இடத்தில் லாரி வாகனம் ஒன்று தடிகளை ஏற்றிக்கொண்டு நாகர்கோயில் நோக்கி செல்ல வந்துகொண்டிருந்தது. அப்போது லாரி வாகனத்தை கைகாட்டி வாகனத்தை தணிக்கை செய்வதற்கு நிறுத்தினோம். வாகனத்தில் இருந்து டிரைவர் கீழே இறங்கி வந்தார். டிரைவரை விசாரித்தகொண்டிருந்தபோது அவருடன் இருந்த மற்றொரு நபர் அங்கிருந்து ஓடிவிட்டார். விசாரித்தபோது லாரி வாகனத்தை ஓட்டி வந்த நபர் தனது பெயர் ஞானராஜ் என்று சொன்னார். வண்டி எண்.TN 74 3355 ஆகும். 1வது எதிரியான ஞானராஜ் விசாரித்தபோது அழகியபாண்டிபுரம் பிரிவில் உள்ள புல எண்.785 /3A என்ற நிலத்தில் இருந்து மற்ற 2 நபர்கள் அவற்றை வெட்டி ஏற்றிவிட்டதாக சொன்னார். 1வது எதிரியை விசாரித்தபோது அந்த 2 நபர்களின் பெயர்களை சொன்னார் தற்போது அவருடைய பெயர் ஞாபகம் இல்லை. வாகனத்தில்இருந்து ஓடிய நபர் பெயர் வில்சன் என விசாரணையில் தெரியவந்தது. வாகனத்தை தணிக்கை செய்தபோது மலைவேம்பு மற்றும் நாவல் 18 தடிகள் இருந்தது. விசாரித்தபோது தனியார் காட்டில் அரசு அனுமதி இன்றி சட்டத்திற்கு புறம்பாக மரங்களை வெட்டி ஏற்றி வந்தது தெரியவந்தது. விசாரித்ததில் மரங்கள் கொண்டு வருவதற்கும் அனுமதிசீட்டு எதுவும் பெறவில்லை.

அதனால் 1வது எதிரியை கைது செய்து வாகனம் மற்றும் தடிகளை பறிமுதல் செய்து 1வது எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. அதில் நான் மற்றும் வனக்காப்பாளர் கையொப்பம் செய்தோம். பின்பு கைப்பற்றப்பட்ட தடிகள் தொடர்பாக எச் நமுனா தயார் செய்தேன். சம்பவ இடம் மற்றும் சம்பவம் குறித்து வனக்குற்ற அறிக்கை தயார் செய்தேன். வாகனம் மற்றும் தடி மரங்களை அழகியபாண்டிபுரம் வனச்சரக அலுவலகத்திற்கு கொண்டுவந்து எதிரிகளை வனச்சரக அலுவலரிடம் ஒப்படைத்தோம். வனச்சரக அலுவலர் உத்தரவு படி வழக்கு பதிவு செய்து 1வது எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினோம். பின்னிட்டு வனச்சரக அலுவலர் விசாரணை மேற்கொண்டார். (**எச் நமுனா எண்.058261 அ.சா.ஆ.1 ஆகவும், வனக்குற்ற அறிக்கை நகல் அ.சா.ஆ.2 ஆகவும், 1வது எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**)